ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 4 | நவம்பர் 1998 | கானம் : 4

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 4 நவம்பர் 1998 கானம் : 4

## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 36 | 4 |
| 3. | யுகள கீதம் - தொடர்ச்சி | 6 |
| 4. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 17 | 9 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 10 |
| 6. | வேத கதைகள் - 18 | 12 |
| 7. | ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 8 | 15 |
| 8. | எந்தரோ மஹானுபாவுலு - 6 | 19 |
| 9. | பாவலோகத்தில் ஒரு ஸஞ்சாரம் | 25 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 39 | 28 |
| 11. | செய்திகள் | 31 |
| 12 | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



'கோவிந்த பட்டாபிஷேக' தினத்தன்று 'மதுராசல'த்தின் மீது
ஸ்ரீ ஸ்வாமிகளும், பக்தர்களும்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : பாகேஸ்ரீ தாளம் : ஆதி

பல்லவி

*பாக்யம் அஹோ பாக்யம் - போதேந்த்ர*
*தவ ஶிஷ்யமண்டலஸ்ய (பாக்யம்)*

அனுபல்லவி

*ஸர்வஸுலப ஸுந்தர ஸத்குரோ*
*துர்லபஸர்வ துரந்தர ஸத்குரோ (பாக்யம்)*

சரணம்

*பரமபாவன மம ஜீவனகுரோ*
*ஸாதுஜன மங்கள காரணகுரோ*
*ஸர்வஶாஸ்த்ர விஶாரதகுரோ*
*முரளீதரனுத முனிபுங்கவகுரோ (பாக்யம்)*

அறிவிப்பு : 'மதுரமுரளி' மூன்றாண்டு இதழ்கள், (July '95 - July '96, August '96 to July '97 & August '97 to July '98) தனித்தனி பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளன.

இவை சென்னை ''ப்ரேமிக பவன''த்தில் கிடைக்கும்.

# 36

ஸமீபத்தில், ஸத்ஸங்கத்தில் ஒரு நாள் நம் ஸ்வாமிகள் ப்ரவசனம் செய்தார்.

''உலகத்தில் பகவத்பக்தியில் ஈடுபடுபவர்களைக் குறிக்க ஆஸ்திகர்கள், பக்தர்கள் என்ற சொற்களை நாம் பயன்படுத்துகின்றோம். ஆஸ்திகர்கள் என்பவர்கள் பொதுவாக எல்லாவிதமான ஸத்கார்யங்களிலும் ஈடுபடுவார்கள். அவர்கள் கோகுலாஷ்டமி உத்ஸவத்திற்கும் வருவார்கள்; எங்கெல்லாம் அதிருத்ரம், மஹாருத்ரம் நடைபெற்றாலும் அதிலும் கலந்து கொள்வார்கள்; சபரிமலைக்கும் மாலை போட்டுக் கொண்டு செல்வார்கள். எங்கெங்கு ஸாதுக்கள் உள்ளார்களோ அங்கெல்லாம் தேடிச் சென்று ஸேவிப்பார்கள்; இவர்கள் எல்லோரும் ஆஸ்திகர்கள்.

ஆனால், பக்தர்கள் இப்படி எல்லா இடத்திற்கும் போகமாட்டார்கள். அவர்கள் தங்கள் இஷ்ட தெய்வத்திடமே அனன்ய பக்தியுடன் இருப்பார்கள், அல்லது தங்களுடைய குருநாதரிடமே அனன்ய நிஷ்டையுடன் இருப்பார்கள். மற்ற தெய்வத்திடமோ அல்லது ஸத்காரியங்களிலோ அவர்களுக்கு வெறுப்போ என்றால் வெறுப்பு இல்லை, அவர்கள் மனம் ஈடுபடமாட்டேன் என்கின்றது. ஏன் மனம் ஈடுபடவில்லை என்றால், ஒரு வ்யக்தியிடம் அப்படி ஈடுபாடு வந்துவிட்டதாலேயே மற்ற தெய்வங்களிடமோ, மற்ற ஸத்கார்யங்களிலோ ஈடுபாடு வரமாட்டேன் என்கின்றது. பக்திக்கு ஈடுபாடுதான் (ஶ்ரத்தை) அடிப்படையென்பதாலும், அது இல்லாமல் செய்வதால் ப்ரயோஜனம் இல்லை என்பதாலும், அவர்கள் மற்ற கார்யங்களிலும் ஈடுபடுவதில்லை; வேறு தெய்வங்களிடமும் செல்வதில்லை. இது தோஷமாகாதா? இவர்களுக்கு பரந்த மனப்பான்மை இல்லையோ? என்று மற்றவர்களுக்கு ஸந்தேகம் வரும்.

ஒரு ஸ்த்ரீயானவள் தன்னுடைய புருஷனைத் தவிர வேறு எவரையும் மனதினால் கூட நினைக்காமல் இருப்பது உயர்ந்த கற்புநெறி என்றால், இதுவும் உயர்ந்த கற்பு நெறியே. அது குணம் என்றால் இதுவும் குணமாகுமேயன்றி தோஷம் ஆகாது. த்யாகராஜ ஸ்வாமிகள், மீரா, அனுமார், கோபிகைகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்றவர்கள் எல்லோருமே இத்தகைய உயர்ந்த பக்தர்கள். இவர்களை இன்றளவும் லோகம் கொண்டாடத்தானே செய்கின்றது.

இதை மேலும் ஒரு விதமாக விளக்கலாம். நாஸ்தி என்றால் இல்லையென்று பொருள். அஸ்தியென்றால் உண்டு என்று பொருள். நாஸ்திகன் என்றால் இறைவன் இல்லையென்று கூறுபவன். ஆஸ்திகன் என்றால் இறைவன் உண்டு என்று ஏற்றுக் கொள்பவன். 'உலகத்தில், இறைவன் இருக்கின்றானா?' என்று கேட்டால், 'அவசியம் இருக்கின்றான். நமக்கு மேலே ஒரு ஶக்தி உள்ளது என்பது என்னவோ நிச்சயம்' என்று கூறுபவர் அநேகர். ஆனால், இறைவனுக்கு ஸம்மதமாகவோ அல்லது இறைவனுடைய பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டோ அல்லது இறைவனைக் காண்பதற்காக ஏங்கி அழுது ஸாதனைகள் செய்து கொண்டோ வாழ்பவர்கள் மிகச் சிலரே. இந்த மிகச் சிலரே பக்தர்கள் ஆவார்கள். அவர்கள் எந்த தெய்வத்திடம் ஈடுபட்டு உபாஸனை செய்து வந்தாலும் சரி, எந்த மார்க்கத்தைப் பின்பற்றி ஸாதனைகள் புரிந்தாலும் சரி, அவர்களும் பக்தர்களே.

கர்ம மார்க்கத்தைப் பின்பற்றும் ஒருவனுக்கு அந்த மார்க்கத்தில் பக்தியுள்ளதால் அவன் பக்தனே. அதுபோல் யோகாப்யாஸம் செய்பவர்களும் பக்தர்களே. வேதாந்தவிசாரம் செய்பவர்களும் பக்தர்களே. ஆகவே, நாம் ஆஸ்திகர்களாக இருந்தால் மட்டும் போதாது. நாம் பக்தர்களாகவும் ஆக வேண்டும். நாம், நம்முடைய குருவை பெரிய ஞானி, மஹாத்மா என்று ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது. அவருடைய க்ருபையையும் ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும். எப்படி ஸம்பாதிப்பது என்றால் அவருக்கு ப்ரீதிகரமான காரியங்களில் ஈடுபடவேண்டும். அவ்வாறு ஈடுபட்டால், எளிதில் அவருடைய க்ருபையை ஸம்பாதித்துக் கொள்ள முடியும்'' என்று சொன்னார்.

இவை ரஸமான விஷயங்களாக இருப்பதால் மதுரமுரளியில் எழுதலாமே என்று தோன்றிற்று.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

## யுகள கீதம் - தொடர்ச்சி

குந்ததாமக்ருத கௌதுகவேஷ:
கோபகோதனவ்ருதோ யமுனாயாம் ।
நந்தஸூனுரனகே தவ வத்ஸ:
நர்மத: ப்ரணயினாம் விஜஹார ॥ 19

மந்தவாயுருபவாத்யநு கூலம்
மானயன் மலயஜ ஸ்பர்ஶேந ।
வந்தினஸ்தமுபதேவகணாயே
வாத்யகீத பலிபி: பரிவவ்ரு: ॥ 20

வத்ஸலோ வ்ரஜகவாம் யதகத்ரோ
வந்த்யமான சரண: பதிவ்ருத்தை: ।
க்ருத்ஸ்ன கோதனமுபோஹ்யதினாந்தே
கீதவேணு ரநுகேடித கீர்த்தி: ॥ 21

உத்ஸவம் ஶ்ரமருசாபி த்ருஶீனாம்
உந்நயன் குராஜஶ்சுரிதஸ்ரக் ।
தித்ஸயைதி ஸுஹ்ருதாஶிஷ ஏஷ
தேவகீஜடர பூரருடுராஜ: ॥ 22

மதவிகூர்ணித லோசன ஈஷன்
மாநத: ஸ்வ ஸுஹ்ருதாம் வநமாலீ ।
பதரபாண்டுவதநோ ம்ருது கண்டம்
மண்டயன் கனககுண்டல லக்ஷ்ம்யா ॥ 23

யதுபதிர் த்விரதராஜவிஹாரோ
யாமினீ பதிரிவைஷதினாந்தே ।
முதித வக்ர உபயாதி துரந்தம்
மோசயன் வ்ரஜகவாம் தினதாபம் ॥ 24

(19-20) ஹே யசோதா ! பாபமற்றவளே ! ஸ்நேகிதர்களுக்கு ஸுகத்தைக் கொடுக்கும் குந்த மாலைகளால் மிக அழகாக அலங்காரம் செய்து கொண்டு உன் பிள்ளையான நந்தகுமாரன், கோபர்களாலும் பசுக்களாலும் சூழப்பட்டவனாய் யமுனா நதியில் விளையாடினான். அப்பொழுது இளங்காற்றானது, சந்தனத்தினுடையதுபோல் குளிர்ச்சியும் வாஸனையுமுள்ளதான ஸ்பர்ஶத்தால் அந்த ஸ்ரீ க்ருஷ்ணனை வெகுமதித்துக் கொண்டு மிகவும் அநுகூலமாக அவன் பக்கம் வீசுகிறது. உபதேவகணங்கள் யாரோ, அவர்கள் ஸ்துதிபாடகர்கள் போல் வாத்யம், கீதம், புஷ்பவ்ருஷ்டி இவைகளுடன் அவனை சூழ்ந்து கொண்டார்கள்.

(21-22) கோவர்த்தன மலையை தரித்தவனும் அதனால் கோகுல வாஸிகளுக்கும் பசுக்களுக்கும் ஹிதத்தை செய்தவனும், வரும் வழியில் பெரியோர்களால் (ப்ரஹ்மா முதலியவர்களால்) வணங்கப்படுகின்ற திருவடிகளை உடையவனும், வேணுகானம் செய்பவனும், பின்வருபவர்களால் பாடப்பட்ட கீர்த்தியை உடையவனும் ஶ்ரமமடைந்த பொழுதிலும் ஒருவித காந்தியால் கண்களுக்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணுகிறவனும் குளம்படிகளாலுண்டான புழுதி படிந்த மாலையுடையவனும், தேவகியின் வயிற்றிலுதித்த சந்த்ரனுமாகிய இவன் ஸாயங்காலத்தில் பசுக்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஸ்நேகிதர்களுடைய (தம்முடைய) இஷ்டங்களைக் கொடுக்க விருப்பத்துடன் வருகின்றான்.

(23-24) சிறிது மதத்தால் சுழலுகின்ற கண்களையுடையவனும், தனது ஸ்நேகிதர்களுக்கு வெகுமதியைச் செய்கின்றவனும், வனமாலை தரித்தவனும், கொஞ்சம் பழுத்த இலந்தைப்பழம் போன்ற முகமுடையவனும், ஸ்வர்ண குண்டலங்களின் காந்தியால் ம்ருதுவான கன்னத்தை அலங்கரித்துக் கொண்டு, கஜேந்திரன் போல் நடக்கின்றவனும், மலர்ந்த முகமுடையவனுமான யதுபதி, கோகுலவாஸிகளுடையவும், பசுக்களுடையவுமான அளவற்ற தாபத்தை (பகலில் காணாததால் உண்டான தாபத்தை) மாலைப்பொழுதில் அகற்றிக் கொண்டு சந்த்ரன் போல் இதோ அருகில் வருகின்றான். ■

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாம ஸங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது. இந்த நாம ஸங்கீர்த்தனத்தில்,

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்த்ரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள், மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச் செலவோ கிடையாது. இதில் ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்சனைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது ''நாம ஸங்கீர்த்தனம்'' என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

''ப்ரேமிக பவனம்''

24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை,

சென்னை - 600 083.

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 17

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
**A. ஸுந்தரேஸ ஶர்மா வாஜபேயயாஜி**

## மூலம்

வாக்தேவதையான ஸரஸ்வதியை மூல நக்ஷத்ரத்தன்று ஆவாஹனம் செய்யவேண்டும். "ஆண் மூலம் அரசாளும்" என்று கூறப்பட்ட உயர்ந்த நக்ஷத்ரம் இது. மூலம் என்றவுடன் நமக்கு ஞாபகம் வருவது ஸ்ரீ மஹா பெரியவாள் அனுஷ்டித்து வந்த மூல மௌனம்தான். மூல நக்ஷத்ரத்தன்று மௌன - விரதம் இருப்பதைக் குறித்து ஸ்ரீ மஹா பெரியவாள் சொல்லியுள்ள விஷயம்:

"நாம் பேசும் பேச்சுக்கள் எல்லாம் வாக்தேவதையான ஸரஸ்வதியின் உபாஸனம். ஆகையால் பேசும் எல்லா வார்த்தைகளும் ஸாத்வீகமாகவும், க்ரோதம் இல்லாமலும், ஒருவருக்கும் மனது புண்படாததாகவும் இருக்கவேண்டும். ஆனால் சில ஸமயங்களில் இதற்கு சற்று முரண்பாடு வருகிறது. அது போன்ற தோஷங்களுக்கு மூல நக்ஷத்ரத்தன்று மௌனம் இருப்பது பரிஹாரமாகி வாக்சக்தி அதிகமாகும்" என்று சொல்லியிருக்கிறார்.

இவ்விதம் பெருமை கொண்டது மூல நக்ஷத்ரம். மூல நக்ஷத்ரம் ஆகாயத்தில் நான்கு நக்ஷத்ரங்களால் தாரை என்ற தாளவாத்ய ரூபத்தின் அமைப்பாக வான ஶாஸ்த்ரக்ஞர்கள் அடையாளம் காட்டுகிறார்கள். ஆவணி மாதம் 28-ந்தேதி முதல் புரட்டாசி மாதம் 10-ந்தேதி வரை நக்ஷத்ரோதய காலத்தில் வானத்தில் காணலாம் என்று கூறுகிறார்கள். மூல நக்ஷத்ர தேவதையின் ஸ்வரூபம் கறுப்பு நிறம், திறந்த வாய், மேல் நோக்கிய தலை முடி, சற்று கோபம் கலந்த கண் கொண்ட ரூபமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. மூல நக்ஷத்ரத்தில் பிறந்தவர்கள் நல்ல ஐஶ்வர்யசாலிகளாகவும், ஸுகபோகங்களை நன்கு அனுபவிப்பவர்களாகவும் இருப்பார்கள். இருப்பினும் இவர்களுக்கு சற்று கர்வப்படும் ஸ்வபாவமும் உண்டு. பிறருக்கு இடைஞ்சலாக இருக்கும் எந்த காரியங்களையும் செய்ய மாட்டார்கள்.

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : J. க்ருஷ்ணமூர்த்தி ஒரு ஜீவன்முக்தரா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஸந்தேகமே வேண்டாம். க்ருஷ்ணாஜி ஜீவன்முக்தரே.

*கேள்வி : அவருடைய ப்ரஸங்கங்கள் புரிந்து கொள்வது மிகவும் ப்ரமமாகவுள்ளதே?*

பதில் : அவர் கை கொண்ட ஸாதனை மார்க்கம் ஒரு மெல்லிய கயிற்றின் மீது நடப்பது போன்று மிகவும் கடினமானதாகும். அவைகளைப் புரிந்து கொள்வதோ, அவற்றை அனுஷ்டானங்களில் கொண்டுவருவதோ ஸாதாரண ஜனங்களுக்கு மிகவும் கடினமே.

***கேள்வி : அவர் ஶாஸ்த்ரம், இதிஹாஸம், புராணம், வேதம், குரு இவைகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லையே?***

பதில் : ஒரு ஸமயம், அவருடைய ப்ரஸங்கத்தில் இதே கேள்வியை ஒருவர் கேட்டார். அதாவது, ''தாங்கள், வேதம், இதிஹாஸம் இவைகளை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் எங்களுக்கு அவைகளில் நம்பிக்கையுள்ளதே'' என்று கேட்டார்.

அதற்கு க்ருஷ்ணாஜி, "This is the place for those who lost faith on such things. If you have faith in such things you need not come here" என்று பதில் கூறினார்.

***கேள்வி : ஸமீபத்தில், ஒரு மடாதிபதி ஸந்யாஸத்தைத் துறந்து விவாஹம் செய்து கொண்டாரே! இது எங்களுக்கு மிகவும் அதிர்ச்சியாக உள்ளதே.***

பதில் : இதில் அதிர்ச்சிக்கே ஒன்றுமில்லை. காமத்தை ஜயிப்பது அவ்வளவு சுலபமல்ல. ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், எப்பேர்பட்ட ஞானிக்கும் ஸரீரம் இருக்கும்வரை காமவாஸனையும் இருக்கும் என்று கூறுகிறார். புராணங்களில், விஶ்வாமித்ரர், ரம்பையிடமோ, மேனகையிடமோ மயங்கியது நாம் சிரிப்பதற்கான விஷயமல்ல. விஶ்வாமித்ரருடைய சரித்ரத்தில் அவர்களிடம் மயங்கி காம வசப்பட்டார் என்றும், மீண்டும் அவர்கள் வருகையில், கோபப்பட்டு கல்லாய்ப் போ என்று சாபம் கொடுத்து கோபவசப்பட்டார் என்றும் தெரிகிறது

இவைகளிலிருந்து எப்பேர்ப்பட்ட தபஸ்வியையும் காமமும், கோபமும் கவிழ்த்து விடும் என்பதே, நாம் அறிந்து கொள்ள வேண்டிய பாடமாகும்.

மேலும் விஸ்வாமித்ரர் சரித்ரத்தில், அவர் ஒரு கூனனை நிமிர்த்தினார் என்றும், திரிஸங்குவை ஸ்வர்க்கத்திற்கு அனுப்பினார் என்றும் தெரிகிறது. கூனனை நிமிர்த்துவது என்பது ஒருவருக்கு ஏற்படும் கஷ்டத்தை நிவர்த்திப்பது என்பதாகும். திரிசங்குவை ஸ்வர்க்கத்திற்கு அனுப்பினது என்பது ஸௌக்கியமாய் இருப்பவருக்கு மேலும் ஸௌக்யத்தைத் தருவது என்பதாகும். இந்த இரண்டு விதமான காரியங்களிலும் ஸாதனை செய்து வருபவர் ஆத்மஸித்தி ஏற்படும் வரையில் ப்ரவேஸிக்கக்கூடாது என்பதும் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாகும்.

ஆகவே, ஸாமான்ய ஜனங்கள், காம, காஞ்சன, கீர்த்திகளில் வசப்படுவதில் ஒன்றும் ஆச்சரியமில்லை.

*கேள்வி : எனக்குத் தெரிந்த ஒருவர், வெகு நாட்களாக ஸாதனை செய்து வருகின்றார். ஆனால், அவருக்கு ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லையே, என்ன காரணம்?*

பதில் : சிலர், பல பேருக்கு முன் தான் மிகவும் ஒழுங்காக இருப்பதாகவும், பக்தியுடன் இருப்பதாகவும், கடுமையான ஸாதனைகள் புரிந்து வருவதாகவும் பேசி, நடித்து, நம்ப வைப்பார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஒரு முன்னேற்றமும் எற்படாமல் இருப்பதில் ஒரு ஆச்சரியமே இல்லை. நீங்கள் சொல்லும் நபர் இந்த வகையில் சேர்ந்தவராக இருக்கலாம்.

*கேள்வி : வேதாந்த விசாரம் செய்து வருபவர்கள் நாம ஸங்கீர்த்தனம் செய்ய வேண்டுமா?*

பதில் : ஸ்ரீ போதேந்த்ர ஸ்வாமிகள், நாம ஸித்தாந்தம் செய்து தம்முடைய பகவன் நாம ரஸோத்யத்தில் 'அபரோக்ஷ ஞானம் உயர்ந்தது தான். அதை அடைவதற்கு நாம ஸங்கீர்த்தனம் ஒரு முக்கியமான ஸாதனையாகும்' என்று வலியுறுத்துகிறார். அதற்கு ஒரு உபமானம் சொல்கிறார்.

ஒரு மஹாராஜா, வைத்யனைவிட மிகப்பெரியவர் என்பதில் யாருக்கும் ஸந்தேஹமில்லை. ஆனால் அந்த மஹாராஜாவிற்கு ஏற்படும் வ்யாதியை போக்கிக் கொள்ள அந்த வைத்யனுடைய ஸஹாயம் தேவை. வைத்தியனுக்கு தன்னுடைய வ்யாதியை போக்கிக் கொள்ள மஹாராஜாவின் ஸஹாயம் தேவையில்லை.

அதுபோல், ஞானத்திற்கு ஆதாரமான ஸித்த ஸுத்தியை ஸம்பாதித்துக் கொள்ள நாம கீர்த்தனம் தேவை. நாம கீர்த்தனமே ஸ்வயமாக ஞானத்தைக் கொடுக்க வல்லது. நாம கீர்த்தனம் செய்பவர் ஞானத்தை அடைய வேறு ஒரு தர்மத்தை அவலம்பிக்க வேண்டிய அவசியமில்லை. ■

# வேத கதைகள் - 18

- தர்மக்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஸாஸ்த்ரிகள்

## பட்டாபிஷேகம்

ப்ரஜாபதியானவர் தேவர்களைப்படைத்து தேவர்களுக்கு நடுவில் கடைசி தம்பியாகவும் கீழ்ப்பட்டவனாகவும் இந்திரனைப் படைத்தார். ''ஓ இந்த்ரனே! ஸ்வர்க்கம் செல். அங்கு என்னால் படைக்கப்பட்ட யாவருக்கும் தலைவனாக இரு'' என்று கூறி இந்த்ரனை ஸ்வர்க்கலோகம் அனுப்பினார். ஸ்வர்க்கம் சென்ற இந்த்ரனை 'நீர் யார்'? என்று தேவர்கள் கேட்டனர். 'ப்ரஜாபதியினால் அனுப்பப்பட்டு நான் இங்கு வந்திருக்கிறேன்' என்று இந்த்ரன் பதில் கூறினான். உன்னால் நன்மை பெற்றவர்களாக நாங்கள் ஆக வேண்டும். அவ்விதம் எங்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய சக்தி உன்னிடமில்லை. ஆதலால் நீ இங்கிருந்து திரும்பிச் செல் என்று விரட்டினர். இந்த்ரன் ப்ரஜாபதியிடம் திரும்பி தேவர்கள் தன்னை அவமதித்ததை ப்ரஜாபதியிடம் கூறினான்.

தற்சமயம் ஸுர்யனிடத்தில் உலகத்தைக் கொளுத்தக்கூடிய எந்த ஒளி இருக்கிறதோ அதுபோல் ஒளி அப்பொழுது ப்ரஜாபதியிடம் இருந்தது. எவ்விதம் இருட்டை விரட்டுவதில் ஸுர்யனுக்கு திறமை இருந்ததோ அதைப் போல கெட்டவர்களை விரட்டுவதில் ப்ரஜாபதியானவர் நல்ல திறமை பெற்று இருந்தார். ப்ரஜாபதியிடம் உள்ள நல்ல திறமையை தான் அடைய வேண்டும் என்று இந்த்ரன் எண்ணினான். ''ஓ ப்ரஜாபதியே! உம்முடைய திறமையைப் பெற்றதால் நல்ல தேஜஸ்வியாக இருந்து கொண்டு தேவர்களுக்குத் தலைவனாக ஆக விரும்புகிறேன் என்று வேண்டினான்.'' ''என்னிடமுள்ள இந்த தேஜஸை உனக்கு அளித்து விட்டால் பிறகு என்னை யார் மதிப்பார்கள்'' என்று ப்ரஜாபதி பதில் கூறினார். ''நீர் என்றும், ப்ரஜாபதி என்ற பெருமை பெற்ற பெரியவர்தான், உம்மிடமுள்ள தேஜஸை எனக்கு அளித்ததற்காக உம்முடைய பெருமைக்கு என்றும் குறைவு வராது'' என்று இந்த்ரன் பதில் கூறினான்.

வடமொழியில் க: என்றால் யார்? என்று பொருள். ப்ரஜாபதி ''யார்'' என்ற அர்த்தம் கொண்ட, க: என்ற சொல்லை கூறியதால், ''உம்மை யாவரும் க: என்றே அழைப்பார்கள்'' என்று இந்த்ரன் ப்ரஜாபதியிடம் கூறினான். ஆதலால் க: என்ற சொல்லானது ப்ரஜாபதியைக் குறிப்பதாக ஆயிற்று.

இவ்விதம் க: என்ற சொல் ப்ரஜாபதியைக் குறிக்கிறது என்று எவர்கள் அறிகிறார்களோ அவர்களும் ப்ரஸித்தி அடைவார்கள்.

பிறகு ப்ரஜாபதியானவர், தன் தேஜஸை தங்கமயமான வட்டமாகச் செய்து இந்த்ரனின் நெற்றியில் கட்டினார். பட்டாபிஷேகத்தின் அடிப்படையான வரலாறு இதுதான். பட்டம் கட்டியதால் இந்த்ரன் தேவர்களுக்குத் தலைவனாக ஆனான். இவ்விதம் பட்டாபிஷேக வரலாற்றை யார் அறிகிறார்களோ அவன் தன்னைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் தலைவனாக ஆகின்றான்.

மறுபடியும் ப்ரஜாபதியானவர் பின்வருமாறு எண்ணத் தொடங்கினார். ''தேவர்களுக்குத் தலைவனாக இருக்கும் இந்த்ரனுக்கு நான் என்ன செய்து விட்டேன்? செய்தது மிகவும் குறைவானது. இதற்குமேல் அதிகமாகச் செய்ய வேண்டும்'' என்று யோசிக்கலானார். தனக்கு அதிக நன்மை புரிய ப்ரஜாபதி விரும்புகிறார் என்று தெரிந்துகொண்ட இந்த்ரன், ப்ரஜாபதியைப் பார்த்து, ''யாவருக்கும் குளிர்ச்சி ஊட்டக்கூடிய ஒளியை எனக்கு அளிக்க வேண்டும்'' என்று குழந்தைபோல் ப்ரஜாபதியிடம் வேண்டினான். ப்ரஜாபதியும் குளிர்ச்சி ஊட்டக்கூடிய சந்த்ரனாக அவனை ஆக்கினார். மறுபடியும் இந்த்ரனும் ''ப்ரஜாபதியே! விரோதிகளை ஒடுக்கக் கூடிய ஸூர்யன் போன்ற ப்ரதாபத்தை எனக்கு அளிக்க வேண்டும்'' என்று புலம்பினான். ப்ரஜாபதியும் அவ்விதம் தன்னிடமுள்ள ப்ரதாபத்தை அளித்தார். இவ்விதம் துஷ்டர்களை அடக்கக்கூடிய ஸூர்யன் போன்ற ப்ரதாபத்தையும் நல்லோர்களைக் காப்பதில் திறமையுள்ள சந்த்ரன் போன்ற ஒளியையும் பெற்ற இந்த்ரனைக் கண்ட தேவர்கள், ஒருவருக்கொருவர் பின்வருமாறு பேசிக் கொண்டார். ''ஓ தேவர்களே! நல்ல வீர்யம் பெற்ற இந்த்ரன் நம்மைக் காப்பாற்றும் திறமை பெற்றவன்'' என்றனர்.

''இந்த இந்த்ரனிடம் உள்ள இந்த்ரிய திறமையை யாவராலும் விளக்க முடியாது'' என்று ஸர்வோத்தமரான ப்ரஜாபதி கூறினார். இந்த்ரியங்களின் திறமை வரப்பெற்றதால் இந்த்ரன் என்ற பெயர் ஏற்பட்டது. ப்ரஜாபதி என்ற பரமன்தான் இந்த்ரனாக ஆனான் என்பதால் ப்ரஜாபதியின் பெயரான பரமேஷ்டி என்ற பெயரும் இந்த்ரனுக்கு ஏற்பட்டது. இவ்விதம் பெருமை வாய்ந்த இந்த்ரனை தேவர்கள் ஸேவித்தனர். கிழக்கில் வஸுக்களும், தெற்கில் ருத்ரர்களும், மேற்கில் ஆதித்யர்களும், வடக்கில் விஶ்வ தேவர்களும், எதிரில் ஆங்கிரஸர்களும் பின்புறத்தில் ஸாத்யர்களும் ஸேவித்தனர்.

இந்த விவரங்களை அறிந்தவன் யாவராலும் வழிபடப்படுவான். இவ்விதமாக இந்த்ரன் ப்ரஜாபதிக்கு ஒப்பான திறமை பெற்றவனாக ஆகி குடி மக்களை தனக்கு அடங்கியவர்களாகச் செய்தான். அவரவர்கள் கட்ட வேண்டிய கப்பத்தை அளிக்குமாறும் கட்டளையிட்டான்.

எல்லா குடிமக்களும் இந்த்ரனுக்கு கப்பம் கட்ட முதலில் ஒப்புக்கொள்ளவில்லை. இந்த்ரன் அனுப்பின வரிவசூல் செய்யும் அதிகாரியைக் கண்ட அவர்கள் கிழக்கிலிருந்து தெற்கிற்குச் சென்றார்கள். இந்த்ரன் தெற்கிற்கும் ஒரு புருஷனை அனுப்ப இரண்டு திசைகளிலும் உள்ளவர்கள் மேற்கு திசை சென்றார்கள். இவ்வாறாக தொடர்ந்து இந்த்ரன் மேற்கு திக்கிலும் பிறகு வடக்கு திக்கிலும் பிறகு மேல் பாகத்திலும் தன் அதிகாரியை அனுப்ப செல்வதற்கு வேறு இடம் இல்லாததால் தேவர்கள் இந்த்ரனுக்கு கப்பம் கட்ட ஒப்புக் கொண்டனர்.

இன்று ராஜாக்களுக்கு பட்டம் சூட்டுவதும், கப்பம் கட்டுவதும் வேதத்திலிருந்துதான் ஏற்பட்டது.

---

(9-ம் பக்க தொடர்ச்சி)

ஒரு காரியத்தை எடுத்துக்கொண்டால் அந்த காரியத்தில் நன்கு புத்தியை செலுத்தி ஈடுபாட்டுடன் செய்வார்கள். நிலையான புத்தியுடன் இருப்பார்கள். இவர்கள் ஸ்நேஹத்தை மற்றவர்கள் ஸுலபத்தில் கலைத்துவிட முடியாது. இவர்களிடம் யாராவது தவறுதலாக நடந்து கொண்டால் அவரை முகாலோகனம் கூட செய்ய மாட்டார்கள். மூல நக்ஷத்ரத்தில் பிறந்தவர்கள், தன் குலத்திற்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய எந்த கார்யத்தையும் செய்யக்கூடாது என்பதில் தீர்மானமாக இருப்பார்கள்.

இவர்களுக்குள்ள ஒரு குறைபாடு, ''தான் என்ற எண்ணம்'' சற்று இருப்பதுதான். இதை இவர்கள் வலுக்கவிடாமல் செய்துவிட்டால் மிகவும் முன்னேறி விடுவார்கள். ஆஞ்ஜநேயரை உபாஸிப்பதால் இவர்களுக்கு வினயம் வரும். இந்த நக்ஷத்ர யாக மந்த்ரத்தில், 'எங்கள் குலத்திற்கு பெருமை சேர்க்கக்கூடிய ஸந்ததியை நாங்கள் அடைய வேண்டும், அஸுரமான **பா**வங்கள் எங்களை விட்டு விலகிவிட வேண்டும், எல்லா நாட்களும் எங்களுக்கு அனுகூலமானவைகளாக இருக்க வேண்டும் என்றும் விஹித கர்மாவை செய்வதில் ஈடுபாடு இருக்க வேண்டும் என்றும், எங்கள் ப்ரஜைகளுக்கும் எங்களுக்கும் மங்களங்கள் உண்டாக வேண்டும் என்றும் ப்ரார்த்திக்கிறது. ■

# ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 8

- ப்ரஹ்மஸ்ரீ பாலக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள்

தர்மம் போல் தோற்றமளிக்கக் கூடியவையாயினும் பகவத் பக்திக்கு விரோதமாக இருக்குமேயானால் அவைகள் தர்மம் ஆவதில்லை என முன் ஸூத்ரத்தில் கூறப்பட்டது. பிள்ளைக்கு பெற்றோர்களும், தம்பிக்கு தமையனும், ஶிஷ்யனுக்கு ஆசார்யனும், மனைவிக்கு கணவனும் பூஜிக்கத்தக்கவர்கள். பூஜ்யர்கள் சொல்லுக்கு அடங்கி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது தர்மமாகும். ஆனால் பூஜிக்கத் தக்கவர்களாய் கருதப்படும் பெரியோர்கள் ஹரிபக்திக்கு விரோதமாய் இருப்பார்களேயானால் அவர்கள் பூஜ்யர்களும் அல்ல. அவர்களுக்கு கீழ்ப்படிவது தர்மமாக ஆவதுமில்லை. அவர்களை மீறி பகவத்பக்தியில் ஈடுபடுவதே தர்மம் என ஶாஸ்த்ரமும், பெரியோர்களும் கூறுகின்றனர்.

*ஜாகே ப்ரிய ந ராமவைதேஹீ*
*தஜியே தாஹி கோடி வைரிஸம*
*ஜத்யபி பரம ஸ்நேஹீ* (ஸ்ரீ ராமசரிதமானஸ்)

"எவர்களுக்கு ஸீதாராமனிடம் ப்ரியம் இல்லையோ அவர்கள் நெருங்கிய நண்பர்களாயிருந்தாலும் கோடி ஶத்ருக்களுக்கு நிகராக நினைத்து விலகுங்கள்" என்கிறார் கோஸ்வாமி துளஸிதாஸ்.

*ப்ரஹ்லாத: பிதரம் சைவ ப்ராதரம் ச விபீஷண: ।*
*மாதரம் பரதஶ்சைவம் ஆசார்யம் ச பலிஸ்ததா ॥*

*பதீம்ஶ்ச வ்ரஜஸுந்தர்ய: யஜ்ஞபத்ந்யஶ்ச ஸாதவ: ।*
*அதிக்ரம்ய ஹரிம் கத்வா பபூவுர்லோக பூஜிதா: ॥*

- ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்

"தந்தையை மீறி ஹரிபக்தி செய்த ப்ரஹ்லாதனும், அண்ணனை மீறி ராமனிடம் வந்த விபீஷணனும், தாயை மீறி ராமபக்தியில் ஈடுபட்ட பரதனும், ஆசார்யனை மீறி பகவானுக்குத் தானம் செய்த பலியும், கணவனை மீறி கண்ணனிடம் ஓடிவந்த கோபிகைகளும், யஜ்ஞ பத்னிகளும் உலகில் பூஜிக்கத்தக்கவர்கள் ஆனார்கள்" என்று ஸத்குரு ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள், ஸ்ரீ ப்ருந்தாவன மாஹாத்ம்யத்தில் குறிப்பிடுகிறார். பூஜிக்கத்தக்கவர்கள் ஹரி பக்திக்கு விரோதமாய் இருந்ததால் அவர்களை மீறி ஹரிபக்தியில் ஈடுபட்ட இவர்களது செயல்

தர்மமாயிற்று. உலகப் பார்வையில் தர்மத்தை மீறினார்கள் என்று தோன்றினாலும், உண்மையில் இவர்கள் செய்ததே தர்மம். இதுவே மேற்படி ஸூத்ரத்தில் சொல்லப்பட்டது.

விஹித கர்மாக்கள் பகவத் ப்ரீதிக்காக செய்யவேண்டும் என்பதால் அவை பகவதனுகூலமான செயல்கள் ஆகின்றன. எனவே, அவைகளை ஒருக்காலும் விட்டு விடக்கூடாது என்கிறார் அடுத்த ஸூத்ரத்தில்.

*''பவது நிஸ்சயதார்ட்யாதூர்த்வம் ஶாஸ்த்ர ரக்ஷணம்''॥ 12*

*நிஸ்சயதார்ட்யாத் ஊர்த்வம்* - ஸித்தாவஸ்தை (அசைக்க முடியாத ஸ்திரமான பக்தி) ஏற்பட்ட பிறகும், **ஶாஸ்த்ர ரக்ஷணம் பவது** - ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட தர்மங்களை அனுஸரிக்க வேண்டும்.

மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதற்கு ஶாஸ்த்ரமே ப்ரமாணமாகும். *''தஸ்மாத் ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ'',* ''செய்யவேண்டியது, செய்யக்கூடாதது, இவைகளுக்கு உனக்கு ப்ரமாணம் ஶாஸ்த்ரமே'' என்கிறார் கீதாசார்யன். பக்தி எனும் போர்வையில் விஹித கர்மாக்களை விட்டுவிடுவதை ஶாஸ்த்ரம் அனுமதிக்கவில்லை. அப்படி விடுபவர்களை பகவான் உபேக்ஷிக்கிறான்.

*''ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாக்ஞே யஸ்த உல்லங்க்ய வர்ததே ।*
*ஆஜ்ஞாசேதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ: ॥*

''வேதமும், ஸ்ம்ருதிகளும் எனது ஆணை. எவனொருவன் அவைகளை மீறி நடக்கிறானோ, எனது ஆணையை மீறிய அவன் எனது த்ரோஹீ. என்னிடம் பக்தி செய்தாலும் அவன் வைஷ்ணவன் அல்ல'' என்கிறார் பகவான். எனவே, ஒருக்காலும் தானாக கர்மாக்களை விட்டுவிடக்கூடாது. தானாகவே விடுவானேயானால் பாபமே ஸம்பவிக்கும். எல்லாவற்றையும் மறந்த ஸித்தாவஸ்தை ஸித்திக்கும் பொழுது கர்மாக்களே அவனை விட்டு விலகி விடுகின்றன. எனவே தான் எந்த கர்மாக்களுடனும் தொடர்பு இல்லாத பகவானும் உலகுக்கு வழிகாட்டியாயிருப்பதால் எல்லாவற்றையும் அனுஷ்டிக்கிறான்.

*''ந மே பார்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷுலோகேஷு கிஞ்சன ।*
*நானவாப்தமவாப்தவ்யம் வர்தத ஏவ ச கர்மணி ॥*
*யதி ஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித: ।*
*மம வர்த்மானுவர்தந்தே மனுஷ்யா: பார்த ஸர்வஶ: ॥*

*- (ஶ்ரீமத் பகவத்கீதை)*

''அர்ஜுன! எனக்கு செய்ய வேண்டியதோ, அடைய வேண்டியதோ முவ்வுலகிலும் ஏதுமில்லை. அப்படி இருந்தும் கர்மாக்களை செய்துகொண்டே இருக்கின்றேன். நான் இவைகளைச் செய்யாமல் போவேனேயானால் எனது வழியை பின்பற்றும் மக்களும் எல்லா கர்மாக்களையும் விட்டுவிடுவார்கள்'' என்கிறார் பகவான். அதேபோல்தான் குணாதீதர்களான ஞானிகளும் பக்தர்களும் லோக ஸங்க்ரஹத்திற்காக அனுஷ்டிக்கின்றனர். பகவானும், ஸித்தாவஸ்தை அடைந்தவர்களும் அனுஷ்டிக்கும் பொழுது ஸாமான்யர்கள் விடலாமா?

*அன்யதா பாதித்யாஶங்கயா ॥ 13*

''இல்லாவிடில் பதிதனாக ஆகிவிடுவான் எனும் அபாயம் உள்ளது.''

ஒருவன் புத்தி பூர்வமாய் கர்மாவை விடுவானேயானால் அதற்கு அவனது சோம்பேறித்தன்மையும், அலக்ஷ்ய போக்கும், அவநம்பிக்கையும், அஶ்ரத்தையுமே ஹேதுவாய் இருக்கும். அவன் நிச்சயம் ஸத்கதி அடையமாட்டான். பதிதனாகத்தான் போவான்.

*"ய: ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத: ।*
*ந ஸ ஸித்திமவாப்னோதி ந ஸுகம் ந பராம் கதிம் ॥*

- (ஸ்ரீமத் பகவத்கீதை)

''எவன் ஶாஸ்த்ர விதியைவிட்டு தன் இஷ்டத்திற்கு இருக்கிறானோ, அவன் பலன் பெறமாட்டான். ஸுகமடையமாட்டான். உயர்ந்த கதியையும் அடையமாட்டான்'' என்கிறார் ஸ்ரீ க்ருஷ்ணன். விஹித கர்மாக்களை விட்டதால் அவனுக்கு பாபம் தான் ஸம்பவிக்கிறது. பாபத்தின் பலனாக பதிதனாகதான் (வீழ்ச்சியடைந்தவன்) ஆகிறான். தான் தற்பொழுது இருக்கும் பிறவியிலிருந்து கீழ்ப் பிறவியடைவதே பாதித்யமாகும். துயரம் நிறைந்த தமோ குணப்ரதானமான பிறவியே அவனுக்குக் கிடைக்கிறது. எனவே ஶாஸ்த்ர விஹிதமான கர்மாக்களை ஒருக்காலும் விடலாகாது.

*லோகோபி தாவதேவ, கிந்து போஜனாதி*
*வ்யாபாரஸ்த்வா ஶரீர தாரணாவதி ॥* 14

வெளி நினைவு மறக்கும் ஸித்த நிலை வரும் வரை பகவத் பக்திக்கு விரோதமில்லாத வகையில் முறைப்படி லௌகிக கர்மாக்களும் செய்யப்படவேண்டும். ஆனால், போஜனம் முதலியவை (லௌகிக கார்யமானாலும்) ஶரீரம் இருக்கும் வரை செய்யலாம்.

குடும்பத்தில் இருந்துவரும் ஒருவனுக்கு தொழில், ஸம்பாத்யம், குடும்ப போஷணம் முதலிய லௌகிக கர்மாக்களும் உள்ளன. ஆனால் பேதபுத்தி உள்ளவரைதான் இவைகளைச் செய்ய முடியும். ஸித்தாவஸ்தை ஏற்பட்ட நிலையில், எல்லா ஸங்கமும் விடுபட்ட நிலையில் லௌகிக கர்மாக்களும் அவனை விட்டு விலகிவிடுகின்றன. விதி, நிஷேதம் அவனிடம் ப்ரவ்ருத்திப்பதில்லை. அந்த நிலையிலும் ஸரீர தாரணைக்கு அவஶ்யம் தேவையான அன்னத்திற்கான ப்ரவ்ருத்திக்கு ஶாஸ்த்ரம் அனுமதியளிக்கிறது. அந்த அன்னமும் நாக்கு ருசிக்காக, போகத்திற்காக என்றில்லாமல் ஸரீர நிர்வாஹத்திற்காகவே இருக்க வேண்டும். உண்ணும் உணவானது ஶுத்தமானதாய், ஸாத்விகமானதாய் இருக்க வேண்டும். ராஜஸ, தாமஸ ஆகாரம் கூடாது. அரை வயிற்றுக்குத்தான் உண்ண வேண்டும் என யோக ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

*த்வௌ பாகௌ பூரயேதன்னை: தோயேனைகம் ப்ரபூரயேத் ।*
*மாருதஸ்ய ப்ரசாரார்தம் சதுர்தமவஶேஷயேத் ॥*

''அரை வயிறுவரை அன்னமும், கால் வயிறுவரை ஜலமும் சாப்பிட்டு, கால் வயிறு காலியாகவே இருக்க வேண்டும்'' என்கிறது ஶாஸ்த்ரம். ஆனால், வெளி நினைவு இருக்கும் வரையில் தான் அன்னத்திற்கான ப்ரவ்ருத்தி இருக்கும். முற்றிலும் வெளிநினைவு அற்ற நிலையில் ஜடம்போல் இருக்கும் ஸித்தனுக்கு அன்னத்திற்கான ப்ரவ்ருத்தியும் இருக்காது. யாராவது பலாத்காரமாய் போஜனம் செய்வித்தால் தான் உண்டு. ஆனால் யோகக்ஷேமவஹனான பகவான் யார் மூலமாவது அவனது போஜனாதி வ்யவஹாரங்களை கவனித்து அவனைப் பேணிக் காக்கிறான். ஸ்ரீ ரமணர், ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், சைதன்யர் போன்றவர்கள் சரிதத்தில் தன்னை மறந்த நிலையில் அவர்கள் இருக்கும்பொழுது அவர்களது ஸரீர நிர்வாஹத்திற்கான வ்யக்தியைக் கொண்டு சேர்த்து அவர்கள் மூலமாய் இவர்கள் ஸரீர யாத்திரையை நடத்தியதைப் பார்க்கிறோம்.

இவ்வாறு ஸித்தாவஸ்தை ஏற்படும் வரை பகவத் ப்ரதிகூலமில்லாத லௌகிக கர்மானுஸரணமும், ஸித்தாவஸ்தை ஏற்பட்ட பின்பும் லோக ஸங்க்ரஹார்தம் வைதிக கர்மானுஸரணமும், ஸரீரம் உள்ளவரை போஜனம் முதலிய ப்ரவ்ருத்தியும் இருக்கவேண்டும் என்று கூறி, மேற்கொண்டு பக்தியின் லக்ஷணங்களாக இவற்றை குறிப்பிடுகிறார் நாரத மஹரிஷி.

(தொடரும்)


# எந்தரோ மஹானுபாவுலு - 6

ஒரு ஸமயம், காஷ்மீர தேசத்து சேணியன் ஒருவன் ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளிடம் நெசவுக் கலையில் போட்டியிட வந்தான். அவன் சுமார் 5 மணி நேரத்தில் உயர்ந்த பீதாம்பரத்தை நெய்து ஸ்வாமிகளின் பாராட்டைப் பெற்றான்.

ஸ்வாமிகளும் அவனது தறியிலேயே வெகு சொகுசாக அமர்ந்து 5 மணி நேரத்தில் சிறிய பீதாம்பரத்தை உருவாக்கினார். சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள், பொன் வண்ணம் ஆகிய பட்டு நூல்களில் நுண்ணிய ஜரிகை வேலைப்பாட்டுடன் இருந்த அந்த பீதாம்பரத்தில் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹ ஸ்வாமி, பக்தன் ப்ரஹ்லாதனுக்கு அருள் பாலிக்கும் காட்சியும் அதில் நெய்து இருந்ததைக் கண்டு போட்டிக்கு வந்த நெசவாளி கண்ணீர் மல்க ப்ரமித்துப்போய் தான் தோல்வியடைந்ததை ஒப்புக் கொண்டு ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து விட்டு அந்த பீதாம்பரத்தை பூஜையில் வைத்துக் கொள்வதற்காக யாசித்துப் பெற்றுக் கொண்ட பின், ஸ்வாமிகளும் அவனைப் புகழ்ந்து பேசி பீதாம்பரமும் மற்றும் ஸன்மானமும் கொடுத்து கௌரவித்து அனுப்பினார்.

விஜயநகர ஸாம்ராஜ்ய வீழ்ச்சிக்குப் பின்னும் அதன் ஒரு பகுதியாக இருந்த தஞ்சாவூரில், சிவப்ப நாயகர், அவர் புதல்வர் அச்யுதப்ப நாயகர், சின்ன சிவப்ப நாயகர் ஆகியோர் ஒன்று கூடி தென் மண்டலத்தில் ஆட்சி புரிந்து வந்தனர். அச்சமயம் யவனர்கள், மேலும் தெற்கே ஊடுருவி வர ஆரம்பித்தனர். தஞ்சாவூர் நாயகர்கள், யவனர்களைத் தடுத்து நிறுத்த, சைன்யத்துடன் வட திசையில் சென்றவுடன் பாதுகாப்பாற்ற தஞ்சாவூர் ராஜ்யத்தை முற்றுகையிட்டு யவன குதிரைப்படை முன்னேறியது. நகரவாஸிகள் நடுங்கி ஸ்வாமிகளிடம் ஓடோடி வந்து ஶரணாகதி செய்து கோவில்களுக்கு வந்திருக்கும் ஆபத்தை எடுத்துரைத்தனர்.

ஸ்வாமிகள் அவர்களை ஆஶ்வாஸப்படுத்தி 'ஸ்ரீ ஹரியின், அனுக்ரஹத்தால் கோவில்களைக் காப்போம், கவலைப்படாதீர்கள்' என்றார். மேலும், தான் இந்த ஆபத்தை ஏற்கனவே அறிந்தமையால் அதை எதிர்க்க ஏற்பாடுகள் செய்து முடித்து விட்டதாகவும் கூறினார். நீங்கள் வரும் வழியில் குதிரை வீரர்கள் திக்கு திசை புரியாமல் பித்துப் பிடித்தாற்போல் சுற்றி சுற்றி வருவதைக் காணவில்லையா? என்று வினவினார். அவர்களை உடனே மடத்தின் உக்கிராணத்திற்கு அழைத்துச் சென்றார்.



'நான் ஸேமித்து வைத்திருக்கும் ஆயுதங்களைப் பாருங்கள்' என்று காண்பித்தார். அங்கு 5, 6 ஆயிரம் தேங்காய்களை தவிர ஆயுதம் ஏதும் இல்லை. பக்தர்கள் விழித்தனர். ஸ்வாமிகள் ''இன்றிரவு யவனர்கள் கோவில்களைத் தாக்க வருவார்கள். அவர்கள் பெரிய கோபுர வாசலை நெருங்கும்பொழுதே நீங்கள் இந்த தேங்காய்களை ஒன்றன்பின் ஒன்றாக உடைத்துவிட்டு, நடப்பதைப் பாருங்கள்'' என்றார். ஸ்வாமிகள் தேங்காய்களின் மேல் மந்த்ராக்ஷதை போட்டு மந்த்ர ஜபம் செய்து, அவைகளை எடுத்துப் போகச் சொன்னார்.

பக்தர்கள் வண்டிகளில் தேங்காய்களை ஏற்றி ஸ்ரீ ஸாரங்கபாணி, ஸ்ரீ சக்ரபாணி, ஸ்ரீ ராமன், ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் கோவில்களின் ப்ரதான வாயில்களில் வைத்துக் கொண்டு தயாராக இருந்தனர். எதிர்பார்த்தபடி யவனர்கள் குதிரையில் உருவிய வாளுடன் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு கோவில்களை நெருங்கினர். உடனே காவல் இருந்த பக்தர்கள் ஸ்வாமிகளை ஸ்மரித்துக் கொண்டு ஒன்றன்பின் ஒன்றாக சிதர் தேங்காய்களை உடைத்தனர். கோவிலை நெருங்கிய ஒவ்வொரு குதிரை வீரனும் தனக்கு தலை தெறிப்பதுபோல் தோன்றி, பட்ட மரம் போல் பூமியில் விழுந்து, சிறிது நேரம் மயங்கி இருந்து, பிறகு ஸுதாரித்துக் கொண்டு, தப்பினோம், பிழைத்தோம் என்று எழுந்து கூச்சலுடன் ஓடலானான். மற்ற வீரர்களும் அந்த வீரர்களைப் பார்த்து ஓட ஆரம்பித்தனர்.

மறுநாள் காலை, சிவப்ப நாயகர் ஓடோடி கும்பகோணம் வந்தார். நடந்ததை அறிந்து ஆச்சரியம் அடைந்தார். ஸ்வாமிகளை அடைந்து ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து ''நமது ராஜ்யத்தை ரக்ஷிக்க வீற்றிருக்கும் மஹாப்ரபுவே! நான் இல்லாமலிருக்கும் ஸமயம் ஒரு துளி ரத்த சேதமும் இல்லாமல் யவன சைன்யத்தை விரட்டி அடித்துள்ளீர். மேலும் காலையில் ஏதோ ஒரு சக்தி என்னை சைன்யத்துடன் இங்கு வேகமாக வரத் தூண்டி இழுத்து வந்து விட்டது. எல்லாம் வல்லவரான தங்களுடைய ஆகர்ஷண சக்திதான் அது. நான் எப்படி நன்றிக்கடன் செலுத்துவேன். கைகூப்பி வணக்கம் சொல்வதைத் தவிர வேறு என்ன கைம்மாறு செய்ய முடியும்'' என்று சொல்லவே, ஸபையோர் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு ஜயகோஷம் செய்தனர்.

பிறகு ஸாரங்கபாணி கோவில் அர்ச்சகர்கள், ஸ்வாமிகளிடம் வந்து இன்று நாலாயிர திவ்யப் ப்ரபந்தத்தை அருளியவர்களுக்கு மோக்ஷம் கொடுத்த புண்ய தினமாகக் கொண்டாடுகிறோம். இந்த உத்ஸவத்தின்

முடிவில், முதல் மரியாதையை நம் ஜீயர் அவர்களுக்கு கொடுப்பது வழக்கம். இன்று முதல், நம் ஜீயர் ஆக்ஞைப்படி, அது தங்களுக்கு செய்யப்பட வேண்டும். எங்கள் திருக்கோயிலை ஸம்ரக்ஷித்து எங்களிடம் ஒப்புவித்த தாங்கள் தயை கூர்ந்து இதை ஏற்க வேண்டும் என்று ப்ரார்த்தித்தனர். ஸ்வாமிகளும் இதற்கு இசைந்தார். இன்றும் அந்த மரியாதை அந்த உத்ஸவ நாளில் ஸ்ரீ விஜயேந்த்ர ஸ்வாமிகள் மடத்தின் பிரதிநிதிக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் சைத்ரோத்ஸவத்தில், 2-ம் நாள் காலையில் வீதியுலாவிற்குப் பிறகு ஸ்ரீ ஸாரங்கபாணி ஸ்வாமி, ஸ்ரீ சக்ரபாணி ஸ்வாமி இருவரும் மடத்துக்கு எழுந்தருளுகிறார்கள். அன்று மதியம் திருமஞ்சனம், ஆராதனை, நைவேத்யம் எல்லாவற்றையும் இரு மூர்த்திகளுக்கும் ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள் மடத்து பூஜகர்களே செய்கிறார்கள். கோவில் அர்ச்சகர்கள் ஒதுங்கி நிற்கிறார்கள். மாலை தீபாராதனைக்குப் பிறகு இரு மூர்த்திகளும் புறப்பட்டு விடுகின்றனர். ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் ஆலயத்திலும் மாசி மக உத்ஸவத்தின்பொழுது 2-ஆம் திருநாளன்று, முதல் மரியாதை, ஸ்ரீ விஜயேந்த்ர ஸ்வாமிகள் மடத்திற்கு செய்யப்படுகிறது. நிவேதனம் செய்த அன்னத்தையும் பாதி மடத்திற்கு தந்து விடுகிறார்கள்.

ஆதிஶங்கரர், வித்யாரண்யர் இவர்களை அடுத்து பெரு மதிப்பிற்கு உரியவராய் இருந்த அப்பய்ய தீக்ஷிதர், ஸ்வாமிகளின் சம காலத்தவராய் இருந்தார். இருவரும், ஒருவர் நூலை மற்றொருவர் கண்டித்து பல நூல்கள் இயற்றினர். இப்படி நூல்கள் மூலமாகவே பரிச்சயம் ஏற்பட்டு, ஒருவரை ஒருவர் பெரிதும் மதித்து வந்தனர்.

ஒரு ஸமயம் அப்பய்ய தீக்ஷிதர், ஸ்வாமிகளைக் காண கும்பகோணம் வந்தார். ஸ்வாமிகளின் பக்தர்கள் தீக்ஷிதரை வரவேற்க ஊருக்கு வெளியே சுமார் 2 மைல் தூரத்தில் ஒரு தோப்பில் காத்து இருந்தனர். பல்லக்கில் வந்த தீக்ஷிதரை ஜனங்கள் கண்டு களித்தனர். அவரின் ''வித்யா களை'' சொட்டும் கம்பீரமான தோற்றம் அவருக்கு மடாதிபதியின் ஒய்யாரத்தைத் தந்தது. எதிர்பாராத விதமாக நம் ஸ்வாமிகளும் அங்கு மேனாவில் வந்தார். இரு பல்லக்குகளும் எதிர் எதிரே நின்றன. யார் யாருக்கு வழிவிடுவது? இது கௌரவ ப்ரச்னை ஆகியது. தீக்ஷிதரே இதற்கு வழி சொன்னார். நான் ஒரு கவிதை இயற்றுகிறேன். ஸ்வாமிகளும் இயற்றட்டும். உயர்வான கவிதை இயற்றியவருக்கு மற்றவர் வழி விடட்டும் என்றார். ஸ்வாமிகளும் ஸம்மதித்தார்.

காவ்ய நாடக அலங்கார ஶாஸ்த்ரங்களில் பாண்டித்யமுள்ள தீக்ஷிதர் ஸன்யாஸியான ஸ்வாமிகளை ஸுலபமாக வென்று விடலாமென்று எண்ணி முதலில் கவிதை புனைந்தார்-

அதாவது *"அஸ்த்யரண்யம் தரண்யங்க்ரி ஶரண்யந்தர்தி பாதபம்"* என்றார்.

இதன் பொருள் என்னவெனில் -

ஸூர்ய க்ரணங்கள் உள்ளே புக முடியாதபடி அவ்வளவு நெருக்கமான காடு உண்டு என்பதாகும்.

இந்த கவிதையின் சிறப்புகள் என்னவென்றால்

1. மிகவும் சிறிய சந்தத்தில், பாதி செய்யுளாக இருப்பது.
2. இயற்கையை உள்ளபடி வர்ணித்து சித்திரமாக காட்டியுள்ளார். இதற்கு ''ஸ்வபாவோக்தி'' அலங்காரம் என்று பெயர்.
3. கவிதையைச் சொன்ன உடனேயே அர்த்தம் விளங்கும். அதற்கு ''வைதர்பீ'' நடை என்று பெயர்.
4. உரையின்றியே கவிதையை ரஸிக்கலாம். இதற்கு ''த்ராக்ஷாபாகம்'' என்று பெயர். எப்படி த்ராக்ஷையை நம் கையாலேயே கொடியிலிருந்து எளிதில் பறித்து சுவைத்து ரஸிக்கலாமோ அப்படி கவிதையையும் ரஸிக்கலாம்.
5. ''ப்ராஸம்'' என்ற சொல்லணி உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ''ரண்ய'' என்ற சொற்றொடர் 3 முறை வருகிறது.
6. முதலில் 2 சொற்களும் மூன்றாவதாக பதம் பிரிக்க முடியாதபடி நெருக்கமாக உள்ள சொற்றொடரும் உள்ளது. இதனால் காடு நெருக்கமானது என்று சொல்லாலேயே உணர்த்துகிறார். இதை ''த்வனி'' என்பர்.

பதிலுக்கு ஸ்வாமிகள் செய்யுள் அருளிச் செய்தார்.

*"ஜரீதத்த பரீரம்ப தரீ ஸுப்த ஸரீஸ்ருபம்"*

இதன் பொருள் என்னவென்றால், ''அதே கானகத்தில் உள்ள மலைக்குஹையின் இரு மருங்குகளிலும் மேலிருந்து கீழாக இரு அருவிகள் பாய்வது அதை ஆலிங்கனம் செய்வது போல் உள்ளது. குஹையில் குளிர்ச்சியான இடத்தில் ஒரு மலைப்பாம்பு நிம்மதியாகத் தூங்குகிறது'' என்பதாகும்.

ஸ்வாமிகளின் செய்யுளும் பாதி செய்யுளாக உள்ள முன்னவரின் செய்யுளைப் பூர்த்தி செய்யும் மறுபாதியாக உள்ளது. அதே ''ஸ்வபாவோக்தி'' அலங்காரம், வைதர்பீ நடை, த்ராக்ஷாபாகம், ப்ராஸம் 4 உள்ளது - ''ரீ'' என்ற எழுத்து அடுத்தடுத்து 4 முறை வருகிறது.

தீக்ஷிதரின் வர்ணனை ஜடமான காட்டைப் பற்றி தான் இருக்கிறது. ஸ்வாமிகளின் வர்ணனையோ சைதன்யமுள்ள பாம்பைப் பற்றி உள்ளது. அதுவும் ''ஆலிங்கனம்'' என்ற பதத்தில் ஶ்ருங்கார ரஸமும் த்வனிக்கிறது.

ஸ்ரீ தீக்ஷிதர் அசந்து விட்டார். உடனே மிகப் பெருந்தன்மையுடன் மேனாவிலிருந்து இறங்கி ஸ்வாமிகளைப் பாராட்டி ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். ஸ்வாமிகளும் தீக்ஷிதரைப் புகழ்ந்து மடத்திற்கு அழைத்தார். அவரும் அதை ஏற்றுக் கொண்டார். மறு நாள் மடத்திற்கு வந்த அவரை மடத்து ஸர்வாதிகாரி வெள்ளித்தடியைக் கையில் ஏந்தி முன் நின்று மரியாதையுடன் அழைத்து வருமாறு ஏற்பாடு செய்தார். ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள் ஸ்ரீ ராமனுக்கு செய்யும் பூஜையை கண்டு உகந்து, தீர்த்தப் ப்ரஸாதங்களை ஸ்வாமிகளிடமிருந்து தீக்ஷிதர் பெற்றார்.

ஸ்ரீ தீக்ஷிதரின் விருப்பத்திற்கு இணங்கி அடுத்த நாள் ஆதிகும்பேஸ்வரர் கோவிலில் பெரிய ஸபை முன் இருவரும் வாத விவாதங்கள் துவங்கினர். பல நாட்கள் இரண்டு பண்டித சிங்கங்களும் மோதிக் கொண்டன. முடிவில் ஸ்வாமிகளே வெற்றி அடைந்தார். ஸபையில் தீக்ஷிதரின் ஆழமான பாண்டித்யத்தையும், வாதத் திறனையும் ஸ்ரீ விஜயீந்தர ஸ்வாமிகள் வெகுவாக ச்லாகித்து கௌரவித்தார். ஒருவரிடம் மற்றவருக்கு ஏற்பட்ட மதிப்பினால் இருவரும் இணை பிரியாத உயிர் நண்பர்களாகி விட்டனர். ஸ்ரீ தீக்ஷிதர் காஞ்சியை விட்டு, ஸ்வாமிகளின் நட்புக்காக தனது கடைசி மூச்சு வரை கும்பகோணத்திலேயே தங்கியிருந்தார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்.**

முன் அட்டை படம் : ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவத்தன்று

பின் அட்டை படம் : ஸ்ரீ ஸரஸ்வதி பூஜையன்று நம் ஸ்வாமிகள்

Photos by : Sri R. Kalyanakrishnan

# பாவலோகத்தில் ஒரு ஸஞ்சாரம்

- ஸ்ரீ ஸ்வாமிகள்

ப்ருந்தாவனத்தில் உள்ள கோபிகைகள் அனைவரும் ஒன்று கூடி யமுனைக் கரையில் ஒரு கூட்டம் போட்டனர். எல்லோருக்கும் ஒரு விதத்தில் கண்ணனிடத்தில் கோபம் என்பதே கூட்டம் போட்டதற்கு காரணம். அதன் ஸாரம்:

''கண்ணனின் ஸ்வபாவம் புரிந்து கொள்ள முடியாததாக உள்ளது. அவன் நம்முடன் பேசும்பொழுதோ, பழகும்பொழுதோ, நம்மைக் காட்டிலும் அவனுக்கு அவ்வளவு ப்ரேமை வேறு யாரிடமும் இருக்க முடியாது என்று மனது அறுதியிட்டுக் கூறுகின்றது. ஆனால், நம்மை விட்டு அவன் வேறு யாரிடமோ சிரித்துப் பேசுவதைக் கண்டாலோ, நம் மனம் படும் அவஸ்தையை சொல்லவே முடியாது. எப்படியாவது அந்த தாபத்தைப் போக்கிக் கொள்ள மனது வழியைத் தேடுகின்றது. சரி அவன் யாருடனோ பேசிக் கொண்டிருந்தானே, அவர்களிடம் சென்று என்ன பேசினான் என்று விசாரிக்கலாம் என்று சென்றால், இது வரை ஸஹஜமாகப் பேசி வந்த அவளோ இன்று ஏதோ உலகத்தையே விலைக்கு வாங்கிவிட்டவளைப் போல் ராங்கியுடன் செல்கின்றாள். ஒரு வார்த்தை வாயைத் திறந்து சொல்ல வேண்டுமே! ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கின்றாள்.

சிலர், அவர்களுடன் கண்ணன் பேசிய பிறகும் வலியவந்து நம்மிடம் பேசுவார்கள். ஆஹா! இவர்களுடன் கோபாலன் பேசியும் துளிக்கூட கர்வம் இல்லையே. நம்மிடம் அவர்களாகவே வலிய வந்து பேசுகின்றார்களே என்று ஸந்தோஷம் ஏற்படும். பேசிய பிறகுதான் அவர்களுடன் ஏன் பேசினோம் என்று ஆகிவிடும். என்ன காரணம் என்றால், ''உன்னைப் பற்றி கண்ணன் இப்படி சொன்னான்'' என்பாள். என்னுடைய விஷயங்களையெல்லாம் கண்ணன் இவளிடம் ஏன் சொல்ல வேண்டும் என்று தோன்றும். நேற்று கூட நான் பக்கத்தில்தானே இருந்தேன். வேண்டுமானால் என்னிடமே கூறியிருக்கலாமே என்று தோன்றும். என்னைப் பற்றி குறையோ நிறையோ கொஞ்சம் கூட யோசிக்காமல் சட்டென்று மற்றவர்களிடம் ஏதாவது கூறிவிடுகிறானே என்ற கோபம் வரும்.

எல்லாம் அறிந்தவன் அவன் என்று மஹான்கள் கூறுகின்றார்களே என்பதைக் கேட்டு, ''நம் மனம் படும் வேதனை அவனுக்குத் தெரியாதா?'' என்றெல்லாம் கோபம் வரும். அவனுக்கு எதைப் பற்றியும், முக்கியமாக, என்னைப்பற்றி கவலையே இல்லையா? என்றும் தோன்றும். ஒருக்கால் நமது காதுக்கு போகட்டும் என்றுதான் கூறியுள்ளானா என்றும் மனது தவிக்கும்.

இவனுடன் பேசி, பழகி, உடன் இருக்கும்பொழுது ஏற்படும் ஆனந்தத்தைக் காட்டிலும், ஏற்படும் கர்வத்தைக் காட்டிலும் அவனுடைய பிரிவினால் ஏற்படும் அவஸ்தை தாங்க முடியாதது. உலகத்தில் ஒன்றுமே பிடிக்கமாட்டேன் என்கின்றது. சிலர், ஶ்ரத்தையுடன் ஜபம், பூஜை, கீர்த்தனம், ஞானம் இவையெல்லாம் செய்கின்றார்கள். நம்மால் ஏன் முடியவில்லை? மனம் அவனையே நினைத்து ஏங்குகின்றது. உடலோ அவனுடைய ஸ்பர்ஸத்தை கேட்கின்றது. அவனுடைய பேச்சுக்களோ போதையூட்டும் சக்தி உள்ளவையாக இருக்கின்றது. அவன் நம் பக்கத்தில் நின்றாலோ கர்வம் மேலிட்டு ஏங்குகின்றது. அவன் தன்னை மனுஷ்யன் என்று சொல்லிக் கொண்டாலும் ஒருக்காலும் நம்முடைய மனம் அதை ஏற்க மறுக்கிறது.

இவனுடைய ஸங்காப்தமே வேண்டாம் என்று நம் மனம் கூறினாலும் கூட அது ''*சீச்சீ*, இந்த பழம் புளிக்கும்'' என்ற நரிக்கதையாகத் தான்'' என்று நம்முடைய உள் மனமே நம்மை கேலி செய்கின்றது. நம்மை குறை சொல்கின்றானே, பெரியதாக! அவனிடம் கூடத்தான் அநேக தோஷங்கள் உள்ளன என்று நாமும் சரிக்கு சரி வரிந்து கட்டினாலும், ஏதோ ஒன்று, அவன் எல்லாவற்றையும் கடந்தவன் என்று உணர்த்திக் கொண்டே இருக்கின்றது. அவனால் வேண்டுமானால் நம்மைப் பார்த்துவிட்டு அலக்ஷியமாகப் போக முடியும். ஆனால் நம்மால் ஒருக்காலும் அவனைப் பார்த்தபிறகு அலக்ஷியமாக போகமுடியவில்லை. வெளியிலாவது நடிப்பாக, கோபமாக முகத்தைக் கஷ்டப்பட்டு வைத்துக் கொண்டாலும் அவனுடைய மோஹன முத்து பற்கள் தெரிய ஒரு புன்முறுவல் பூத்தால் போதும், அந்த க்ஷணமே நான் காணாமல் போய் விடுகின்றேன்.

அவன் இருக்கும் பக்கமே இனி போவது இல்லை என்று வ்ரதம் எடுத்துக் கொண்டால், அது, ''குடிகாரன் நாளை முதல் நான் குடிக்கப் போவதில்லை'' என்ற வ்ரதம் எடுத்துக் கொண்டது போல் ஆகிவிட்டது. கால்கள் நம்மையறியாமல் அவனுடைய ஸன்னதியை நோக்கி, பழக்கப்பட்ட மாடுகள் கொட்டிலை நோக்கிப் போவது போல் போகின்றது.''

இவைகள்தான் அந்த கோபிகைகள் அன்றைய கூட்டத்தில் பேசினதில் ஸாராம்ஸம். என்ன முடிவு எடுக்கப்பட்டதென்றால், ''இனி நாம் யாரும் அவன் வருந்தி வருந்தி அழைத்தாலும் போகக் கூடாது, வீடு தேடி வந்தாலும் போகக்கூடாது. ஒருக்கால் நாம் ஒருவர் வசமிழந்தால், மற்றவர் ஒன்று கூடி அவளை நிகா படுத்தவேண்டும். இந்த முறை நாம் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து இந்த திட்டத்தில் இருந்து வழுவாமல் இருக்கவேண்டும்'' என்று பலவாறாக ஸங்கல்பம் செய்து கொண்டு இருந்தார்கள்.

அந்த ஸமயத்தில், பழக்க தோஷத்தில் ஒரு கோபி, ''அதோ, அங்கே பார் கண்ணன்'' என்றாள். அவ்வளவுதான். அடுத்த க்ஷணம் அவள் காட்டிய இடத்தில்தான் அத்தனை பேரும் இருந்தார்கள். ஆனால், அங்கு கண்ணனைக் காணோம். தங்களுடைய வைராக்யத்தை நினைத்து அவர்களுக்கு ஒரே வெட்கமாகிவிட்டது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளக்கூட அவர்களுக்கு வெட்கமாக இருந்தது. மௌனமாக அவர்கள் அனைவரும் வீடு திரும்பினார்கள்.

அப்படி திரும்பும்பொழுது அவர்கள் மானஸீகமாக ஒரு ஸங்கல்பம் செய்து கொண்டார்கள். அது யாதெனில், ''அவன் எப்படி இருந்தாலும், நமக்கு ப்ரபு, நம்முடைய ஸ்வாமி, நமக்கு ஸர்வமும் அவனே. அவனைவிட்டால் நமக்குக் கதியில்லை. அவனுக்கும் நம்மை விட்டால் யாருமில்லை. ஆகவே, இதைப்பற்றி இனி புத்தி பூர்வமாக ஆலோசனை செய்யாமல் அவன் இஷ்டப்படி இருக்கவேண்டும்'' என்பதே அந்த ஸங்கல்பம்.

புத்தி சொல்லும் தீர்மானங்களையெல்லாம் மனது ஏற்றுக் கொண்டால் தேவலாமே. சூரியனைக் கண்டால் மலரக்கூடாது என்று தாமரையும், மேகத்தைக் கண்டால் ஆடக்கூடாது என்று மயிலும் தீர்மானித்தால் எப்படியோ, அப்படித்தான் அவர்கள் கண்ணன் விஷயமாக போடும் தீர்மானங்கள் எல்லாம். ■

---

*ஒரு வைத்தியர் சொல்லும் பத்தியத்துடன் மருந்தை உட்கொண்டால்தான் வ்யாதி குணமாகும். அதுபோல், ஸத்யம், அஹிம்ஸை, ப்ரஹ்மசரியம், க்ஷமை, மிதாஹாரம், மிதபேச்சு, மிதநித்ரை இவைகளுடன் கூடிய ஸாதனைகளே பலிக்கும்.*

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 39

எவர் எப்பொழுதும் ஸத்வ்ருத்தியிலேயே இருக்கிறாரோ, அவரே ஸாது எனப்படுவார். சோம்பேறிகள் ஒருக்காலும் ஸாதுக்கள் ஆக மாட்டார்கள். உண்மையான ஸாதுக்கள் எப்பொழுதும் ஜபம் செய்து கொண்டும், கீர்த்தனம் செய்துகொண்டும், பூஜை செய்துகொண்டும், தீர்த்தயாத்ரை செய்துகொண்டும், ஶாந்தமாக, கருணையுடன் இருப்பார்கள். இப்பொழுது அநேக நபர்கள் ஸாது வேஷத்தில் இருக்கிறார்களே தவிர, அவர்கள் ஸாதுக்கள் இல்லை. உண்மையான துறவி ஒரு நிமிடம் கூட காலத்தை வீண் செய்யக்கூடாது.

உலகத்தில் தொழிலாளர்கள் தங்கள் அன்றாட தேவைக்காக கடும் வெயிலில் ரோடு போட்டுக்கொண்டும், பல மாடி கட்டிடங்களைக் கட்டும் பணியில் வேலை செய்துகொண்டும், பொருள் ஈட்டி தங்கள் குழந்தை, குடும்பத்தை காப்பாற்றி வருகிறார்கள். சிலர் உடல் உழைப்பாக இல்லாமல் தங்களது அறிவுத் திறமையால் பல நோய் தீர்க்கும் மருந்துகளையும் மக்களுக்கு உதவும் பல விஞ்ஞான ஸாதனங்களையும் கண்டுபிடித்து, அதன் மூலம் பொருள் ஈட்டி, குடும்பத்தை போஷித்து வருகின்றார்கள். உலகத்தில் யாருமே காரியம் செய்யாமல் இருப்பதில்லை.

ஒரு லௌகீகன் தான் உணவு உண்பதற்கு முன்பாக, ''இந்த உணவை நாம் நேர்மையாக ஸம்பாதித்தோமா, அறிவினாலோ உடலினாலோ உழைத்து ஸம்பாதித்தோமா, யாருக்கும் துரோகம் செய்யாமல் இருக்கின்றோமா, நம்மையும் நம்முடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களையும் போஷித்து ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றி வருகின்றோமா'' என்பதை சிந்திக்க வேண்டும்.

திரைப்படங்களைப் பார்ப்பது, பலவிதமான கேளிக்கைகளில் ஈடுபடுவது, கேளிக்கைகளைப் பார்ப்பது, க்ராம்யமான கீதங்களை கேட்பது, இவைகளெல்லாம் பொழுதுபோக்கிற்காக இருக்கலாமே தவிர இவைகளே பிழைப்பாக ஆகிவிடக்கூடாது. அதுபோல், ஸாதுக்கள், துறவிகள் அன்றைய ஆகாரத்தை அவர்கள் எடுத்துக் கொள்வதற்கு முன், நாம் உழைக்காமல் பிறர் உழைத்து அதில் ஒரு பாகத்தை நமக்கு அளிக்கின்றார்களே, அந்த அன்னத்தை உட்கொள்ள தமக்கு அருகதை இருக்கிறதா என்று தன்னை விசாரிக்க வேண்டும்.

அருகதை யாதெனின், அவர் உண்மையான துறவியின் லக்ஷணமான, ஸதா ப்ரஹ்மவிசாரமோ அல்லது நாமகீர்த்தனமோ செய்து கொண்டிருக்க வேண்டும். ஒரு நாளைக்கு சுமார் 8 மணி நேரம் பகவத் விஷயமாக ஜப, த்யானம் செய்து கொண்டிருப்பாராயின் அவருக்கு அந்த அன்னத்தை சாப்பிடும் தகுதியுள்ளதாகும்.

அவதார புருஷர்களின் நிலை வேறு. நாம் இங்கு ஸாதகர்களைப் பற்றியே பேசி வருகின்றோம்.

உலகத்தில் பக்தி இல்லாதவன், பக்தி ப்ரசாரம் செய்ய முடியாது. அங்ஙனம் செய்ய ஆரம்பிப்பானேயானால், அந்த ப்ரசாரத்தினால் என்ன பயன்தான் விளையப் போகிறது?

தன்னுடைய ப்ரச்னைகளையே தீர்த்துக் கொள்ள முடியாதவர்கள், பிறருடைய ப்ரச்னைகளை தீர்த்து வைக்க முயல்வது விந்தையிலும் விந்தை. ஒருவர் மற்றவருக்கு அபயம் அளிப்பதற்கு முன்னால் அவருக்கே எந்தவிதமான பயமும் இருக்கக் கூடாது. ஏதோ ஒரு விஷயத்திற்காக அபயம் அளிக்கிறார் அல்லவா. அந்த விஷயத்தில் பயமில்லை. அதனால் அபயம் அளிக்கலாம் என்பது மட்டுமில்லை. எதாவதொரு விஷயத்தில் பயமிருந்தால்கூட அவர் எதற்கும் அபயம் அளிக்க சக்தியற்றவரே.

நம்முடைய கஷ்டத்தைப் போக்கிவைக்க சக்தி இல்லாதவரிடம் நாம் உரைப்பதால் நமக்கோ அவருக்கோ எந்தவிதமான ப்ரயோஜனமும் இல்லை. ப்ரயோஜனம் இல்லாதது மட்டுமில்லை. நமக்கு நேரம், காலம் எல்லாம் வ்யர்த்தம். யாரிடமாவது சொன்னால் தேவலை போல் உள்ளது என்றால் உண்மையான ஸாதுக்களிடமும், பகவானிடமும் மட்டுமே சொல்ல வேண்டும். ஸாதுக்களுக்கு புரிந்து கொள்ள சக்தி இல்லாவிடில், ஏகாந்தத்தில் இறைவனிடம் சொல்லி முறையிடலாம். இறைவனிடம் செய்யும் ப்ரார்த்தனைகள் ஒருக்காலும் வீணாகாது.

இதை விட்டு, யாராவது நம்மைப்பார்த்து, ''ஏதோ முகம் வாட்டமாக இருக்கிறதே என்ன கவலை?'' என்று கேட்டால் உடனே நம் குறைகளைக் கூறி ஒரு பாட்டு அழ ஆரம்பிக்கக் கூடாது. அப்படி கேட்பவர்கள், உங்களுடைய குறைகளில் அவர்களுக்கு அக்கறையில்லாமல், எங்கு வம்பு கிடைக்கும் என்று அலைகிறார்கள் என்றுதான் அர்த்தம்.

உங்கள் முன், பச்சாதாபமாகக் கேட்டு பிறகு இதை பலரிடம் பேசி, உங்களையே கேலி செய்யக் கூடும். உண்மையான ஸாதுவாக இல்லாமல் ஸாது வேஷத்தில் இருப்பவரிடம் அந்தரங்கமான விஷயத்தைச் சொன்னாலும் கூட, நாளைக்கு அதுவே அவர் மூலமாக, பல சிக்கல்களை நமக்கு உருவாக்க ஹேதுவாயிருக்கும்.

கோபம் கூட, வரவேண்டிய இடத்தில் வந்தால் குணமேயாகும். வால்மீகி ராமாயணத்தில் ராமருடைய குணங்களை வர்ணித்து வந்த வால்மீகி, ராமருக்கு ப்ரளயகால அக்னி போல் கோபம் வரும் என்பதை குணமாக வர்ணிக்கின்றார். அநீதியைக் கண்டு கோபப்படுவதுதான் குணம். அநீதியைக் கண்டு நமக்கென்ன? என்று ஒதுங்குவது கோழைத்தனம். மேலும் ப்ராஹ்மணனுக்கு வேண்டுமானால் - அதிலும் துறவிக்கு வேண்டுமானால் எப்பொழுதும் ஶாந்தத்தைக் கைக் கொள்வது தர்மமாக இருக்கலாம். ஆனால் ராஜாவிற்கோ, துஷ்டர்களை சிக்ஷிப்பதும், அநீதி நடக்கும் ஸமயத்தில் கோபப்படுவதும் குணமாகும். அநீதியைக் கண்டித்தால் ஒருவருடைய அப்ரியத்தை ஸம்பாதித்துக் கொள்ளக் கூடுமே என்று சிலர் அஞ்சுவது உண்டு. அநீதிக்காரர்களின் ப்ரியத்தை ஸம்பாதிக்க நினைப்பவர்கள் எப்படி நீதிமான்களாக இருக்க முடியும்?

ஆகவே, ஸாத்வீகம் வேறு, சோம்பேறித்தனம் வேறு. பொறுமை வேறு, கோழைத்தனம் வேறு. பகவத்பாதாள் போன்ற மஹாத்மாக்கள், தவறான ஸித்தாந்தங்களையும் மதங்களையும் கண்டிக்கவில்லையா? இது தவறு என்று யாரும் கூறவில்லையே? ஶங்கரரை, ஜகத்குரு என்று பல மஹான்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே. ஒருவரோ அல்லது பலரோ கூடி அவருடைய வாதங்களை எடுத்துக் கூறி சர்ச்சை செய்து அந்த வாதங்களின் அடிப்படையில் ஸித்தாந்தங்களை கண்டிப்பதோ ஆதரிப்பதோ ஆரோக்யமான விவாதமாகும். அதைவிட்டு, ஒருவரை ஒருவர் தனிப்பட்ட முறையில் அவர்களுடைய குலத்தையோ. வாழ்க்கையையோ பற்றிப் பேசி நிந்தை செய்வதுதான் அநாகரிகமாகும். மஹாத்மாக்கள் ஒருக்காலும் தனிப்பட்ட நிந்தையில் இறங்க மாட்டார்கள். ஸித்தாந்தங்களை வேண்டுமானால் கண்டிப்பார்கள்.

(தொடரும்)

**- முரளீதரதாஸன்**

# செய்திகள்

### அக்டோபர் 1-ந் தேதி - புரட்டாசி ச்ரவணம்

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளின் அவதார உத்ஸவம் கொண்டாடப்பட்டது. காலையில் பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம், அலங்காரம் செய்விக்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்வாமிகள் ச்ரவண தீபம் ஏற்றினார்கள். அன்றிரவு நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

### அக்டோபர் 2-ந் தேதி - ஏகாதசீ

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு திருமஞ்சனம் செய்விக்கப்பட்டது. காலையில் பஜனையும் மாலையில் திவ்யநாமமும் நடந்தேறியது.

### அக்டோபர் 5-ந் தேதி - பௌர்ணமி

சென்னை ப்ரேமிகபவனத்தில், காலையில் வேத பாராயணமும் ஸ்ரீ சௌந்தரராஜ பாகவதர் அவர்களின் உஞ்சவ்ருத்தியும் மாலையில் அஷ்டபதி பஜனையும் இரவில் திவ்யநாமமும் நடைபெற்றன.

### அக்டோபர் 10-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகள் சிதம்பரம் சென்று புரட்டாசி சனிக்கிழமை மஹோத்ஸவத்தில் கலந்து கொண்டார்கள்.

### அக்டோபர் 11-ந் தேதி

முல்லைவாசல் ப்ரஹ்மஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள் அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற திவ்யநாம பஜனையில் நம் ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

### அக்டோபர் 19-ந் தேதி - தீபாவளி

காலையில் பெருமாளுக்கு கங்கா ஜலத்தினால் திருமஞ்சனம் செய்விக்கப்பட்டது. மாலையில் திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

**அக்டோபர் 21-ந் தேதி - ஐப்பசி ஸ்வாதி - ஸ்ரீ ஸ்வாமிகளின் திருநக்ஷத்ரம்**

சென்னை ப்ரேமிகபவனத்தில், காலையில், ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவத்தை ஒட்டி பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. ஆவஹந்தி ஹோமமும், த்வாதஶாக்ஷரீ ஹோமமும் நடைபெற்றன.

அசோக் நகர், ஸ்ரீபாஷ்யம் ஐயங்கார் க்ருஹத்தில் ஆவஹந்தி ஹோமம் நடைபெற்றது.

ஸ்ரீராமானுஜம் அவர்கள் க்ருஹத்தில் அகண்ட ''ஹரே ராம'' நாமஜபம் காலை 5 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெற்றது. மதுரபுரி ஆஶ்ரமத்தில் காலையில் அன்னதானம் நடைபெற்றது.

விருகம்பாக்கம், ஸ்ரீ மோகன் அவர்கள் க்ருஹத்தில் மாலையில் 6 மணி முதல் 9 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனங்கள் பாடப்பட்டன.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**நவம்பர் 1-ந் தேதி ப்ருந்தாவன த்வாதஶீ**

சென்னை ப்ரேமிகபவனத்தில் துளஸீ கல்யாணம் நடைபெறும்.

**நவம்பர் 3-ந் தேதி - ராஸ பூர்ணிமா**

சைதன்ய மஹாப்ரபு ஜயந்தி மஹோத்ஸவம், சென்னை ப்ரேமிக பவனத்தில் நடைபெறும்.

**டிசம்பர் 1-ந் தேதி கைசிக த்வாதஶீ**

திருமழிசை ஸ்ரீ ஜகன்னாத பெருமாளுக்கு நம் மிஷன் சார்பில் விசேஷ திருமஞ்சனம், அலங்காரம் கட்டளை செய்யப்படும்.

**டிசம்பர் 3-ந் தேதி - விஷ்ணுதீபம்**

சென்னை ப்ரேமிகபவனத்தில் விஷ்ணுதீபம் ஏற்றப்படும். விசேஷ திருமஞ்சனமும், விசேஷ திவ்யநாமமும் நடைபெறும்.

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98/
WPP No. TN/MS(S)/54/98

| வேணு : 4 | நவம்பர் 1998 | கானம் : 4 |
|---|---|---|




Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar